


# எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-


# உன் கிரியைக்குத்தக்க பலன் உண்டு!


மலர்: 18 | Volume: 18    மார்ச் 2022 | March 2022    இதழ்: 6 | Issue: 6



ஒடிசா கோராபுட் மாவட்டத்தில் நமது சுவிசேஷ குழுவினர்



# உங்கள் சகோதரனிடமிருந்து...



அன்பும் மனதுருக்கமும் கொண்ட ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, நீங்கள் கர்த்தருக்குள் சுகமாயிருப்பீர்கள் என்று முழு நிச்சயமாக நம்புகிறேன். தேவனுடைய பெரிதான கிருபையினாலே, இந்த மாதத்திலும் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் தினமும் முறையாக ஜெபம் செய்கிறீர்களா? குடும்ப ஜெபம் செய்கிறீர்களா? ஏனென்றால், நீங்கள் குடும்ப ஜெபம் செய்யும் போது தினமும் இயேசு உங்களை சந்தித்து உங்களை ஆசீர்வதிக்கும்படி உங்கள் வீட்டிற்கு வருவார். தான் உண்டாக்கின ஆதாமையும் ஏவாளையும் அனுதினமும் சந்திக்கும்படி வந்த ஆண்டவர், இன்றும் அவருடைய பிள்ளைகளை சந்திக்கிறார். இது உண்மையான காரியம். உங்கள் இருதயம் உங்களைக் குறித்து குற்றம் சொல்லாதபடிக்கு, அவரை உண்மையாக நேசித்து, அனுதினமும் அவருடைய பாதத்தில் காத்திருங்கள். அப்பொழுது உங்கள் வீட்டின் குறைவுகளெல்லாம் நிறைவாகும்.

**தேவனுடைய கிருபையினாலே, நமது பணித்தளத்திலே மாதந்தோறும் 500 கிராமங்கள் என்ற இலக்கோடு மிஷனெரிகள் சுவிசேஷத்தை அறிவித்து வருகிறார்கள். அவர்களுக்கு மெகாபோன் (Megaphone) இருந்தால் இன்னும் பிரயோஜனமாக இருக்கும். ஆகவே, கர்த்தர் உங்கள் உள்ளத்தை தூண்டினால் உங்கள் குடும்பத்தின் சார்பாக வாங்கிக் கொடுங்கள். ஒரு மெகாபோனின் விலை ரூ.5,000. தற்போது 20 மெகாபோன்கள் தேவையுள்ளது.**

உங்கள் ஜெபங்களிலே நமது மிஷனெரிகளை நினைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுடைய எல்லாவித ஆசீர்வாதங்களுக்காகவும் நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபிக்கிறேன். தேவனுடைய கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

T. Asir Gn

**(T.ஆசீர் ஞானராஜ்)**

**வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.**
**94865 88270**

**24 மணி நேர ஜெப உதவிக்காக:**
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 94865 88270**
Email: calvarygospelmm@gmail.com

Follow us youtube channel:
**Asir Gnanaraj**

**https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)**



# உன் கிரியைக்குத்தக்க பலன் உண்டு!

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. வெளி. 22:12**

## தீர்க்க தரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

ஆண்டவர் இயேசு நான் சீக்கிரமாய் வருவேன் என்று சொல்லிவிட்டுப் போனார். அவர் திரும்ப வரும் முன்பாக இந்த உலகத்தில் என்ன நிகழ்வுகளெல்லாம் நடக்கும் என்பதையும் அவர் தீர்க்கதரிசனமாக உரைத்தார். இன்றும் அந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. இயேசு வரும்பொழுது அவர் வெறுமையாக அல்ல, அவர் நிறைய பரிசுப் பொருட்களோடு கூட இறங்கி வருவார். இதனையே அவனவனுடைய கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்று சொல்லுகிறார்.

பிரியமானவர்களே, தன் சொந்த குடும்பத்தை நடத்துவதற்காக ஒரு தாயும் தகப்பனும் மிகவும் பிரயாசப்படுவதுண்டு. பிள்ளைகள் சமுதாயத்திலே நல்ல நிலைக்கு வர வேண்டுமென்று இருதயத்தில் விரும்புகிற எந்த ஒரு தகப்பனும் தாயும் அந்த பிள்ளைகளுக்காக பிரயாசப்படுகிறார்கள். தான் பட்ட பாடுகளை தன் பிள்ளைகள் சந்திக்கக் கூடாது. தன் பிள்ளைகள் சமுதாயத்திலே, தேசத்திலே ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்பதற்காக மிகவும் பிரயாசப்படுவதுண்டு. அதைப் போலவே அழிந்து போகிற மக்களுக்காக தன் வாழ்வை தியாகம் செய்து உருகுகிற

மெழுகுவர்த்தியாக எரிந்து மற்றவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டுகிற மனிதர்களை மீட்கும்படியாக அவர் மறுபடியும் இந்த உலகத்திலே வெளிப்படப் போகிறார். அந்த கிரியைக்குத்தக்கதான வெகுமதிகளை பலனை நான் கொண்டு வருவேன் என்று ஆண்டவர் உரைக்கிறார். ஆத்தும ஆதாயத்திற்காக நாம் எடுக்கிற முயற்சிகள் என்ன? நம்மை சுற்றிலும் அழிந்து கொண்டிருக்கிற ஜனங்களைக் குறித்து நம்முடைய இருதயத்திலே என்ன சிந்திக்கிறோம் என்பதைத்தான் ஆண்டவர் இயேசு உற்று கவனித்துப் பார்க்கிறார். செய்தித்தாளில் விபத்துகள் நடந்து மரித்ததை நாம் வாசிக்கிறோம். தற்கொலை செய்து மரித்ததை கேள்விப்படுகிறோம். கொலை செய்யப்பட்டு மரித்ததை கேள்விப்படுகிறோம். கொள்ளை நோயினாலே மரித்து போனவர்கள் இயற்கையின் சீற்றத்தினாலே மரித்து போனவர்கள் இப்படியாக அழிவுகளை குறித்து நாம் செய்திகள் வழியாக அறிகிறோம். அதையெல்லாம் நாம் பார்க்கும் போது நம்முடைய இருதயத்திலே என்ன சிந்திக்கிறோம் என்பதை ஆண்டவர் உற்று கவனித்து பார்த்துக்கொண்டேயிருக்கிறார். ஏனென்றால் **சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை – எசே. 18:32** என்று சொன்ன ஆண்டவர்எல்லா ஆத்துமாக்களும் என்னுடையது என்று சொன்ன ஆண்டவர் ஒரு ஆத்துமா மரித்து இளைப்பாறுதலுக்குள் பிரவேசியாமல் அது பாதாளத்தை நோக்கி செல்ல தீவிரப்படும்போது அவர் கண்ணீர் வடிக்கக் கூடியவராக இருக்கிறார். இந்த உலகத்திலே எல்லாவிதமான நன்மைகளையும் தியாகம் செய்து விட்டு ஆத்தும ஆதாயத்திற்காகவே பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் உண்டு. ஆகவே இயேசுவுக்காக இந்த பூமியிலே வாழக் கூடியவர்களை ஆத்துமாக்களுக்காக கலங்கி கண்ணீர் வடிக்கக் கூடியவர்களை, அவரோடு கூட அழுது புலம்புகிறவர்களை மீட்கும்படியாகத்தான் ஆண்டவர் இயேசு மறுபடியுமாக இந்த உலகத்திலே வரப்போகிறார். சுகபோகமாய் வாழ்கிறவர்களை மீட்பதற்காக அல்ல. உலக சந்தோஷத்தை, சிற்றின்பத்தை அனுபவித்து கொண்டிருக்கிறவர்களை மீட்கும்படியாக அவர் வருவதில்லை. அவருக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களை மீட்கும்படியாகவே அவர் இந்த உலகத்திலே வருவார். என்னுடையவர்களுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறதாய் இருக்கிறது. என்று ஆண்டவர் சொல்லிலிருக்கிறாரே!

பிரியமானவர்களே, **கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. – மல்கியா 3.16** ஜீவ புத்தகம் திறக்கப்படும் நாளிலே அநேக புத்தகங்கள் திறக்கப்படும். **மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில்**

***எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். – வெளி. 20:12*** ஜீவ புத்தகத்தை திறக்கும் போது அதோடு கூட இன்னும் அநேக புத்தகங்கள் திறக்கப்படும். அவைகளெல்லாம் ஞாபகப் புத்தகங்கள். ஒரு மனிதனுடைய நற்கிரியைகளை எழுதி வைத்திருக்கிற புத்தகம். நீங்கள் வடித்த கண்ணீர், அழிந்து போகிற மக்களுக்காக நீங்கள் உபவாசித்து, விழித்திருந்து ஜெபிக்கிற ஜெபம் ஓடி ஓடி துண்டுப்பிரதிகள் கொடுத்த செயல்கள், தியாகத்தோடு உங்களை வருத்தி காணிக்கை கொடுத்து சுவிசேஷப் பணியை ஆதரிக்கிற காரியங்கள் இந்த விதமான நல்ல கிரியைகளை தேவன் உன்னதத்திலிருந்து உற்று கவனித்துப் பார்க்கிறார். அவைகளெல்லாம் ஞாபகப் புத்தகத்திலே ஒவ்வொன்றாக எழுதப்படுகிறது. அந்த புத்தகங்களெல்லாம் திறக்கப்படும் நாளிலே அநேகருடைய முகங்கள் வெட்கப்பட்டுப் போகும். சிலரோ நான் எப்பொழுது இதை செய்தேன் என்று சொல்லுவார்கள். ஆண்டவரோ அதை விவரித்து காண்பிக்கக் கூடியவராய் இருக்கிறார். ***சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் – ரோமர் 10:15*** என்று வேதம் வருணிக்கக் கூடியதாய் இருக்கிறது.

**நான் வேலை பார்த்துக்கொண்டே ஊழியம் செய்து கொண்டிருந்த ஆரம்ப காலம். வேலைக்கு போய்விட்டு திரும்பி வரும்போது பேருந்து நிலையத்தில் துண்டுப் பிரதிகள் கொடுக்கும் பழக்கம் எனக்கு உண்டு. தினமும் சாப்பாடு எடுத்துக்கொண்டு போகும் பையில் துண்டுப் பிரதிகளும், புதிய ஏற்பாடுகளும் இருக்கும். ஒரு சில நண்பர்களாக இணைந்து மாலையில் தினமும் பேருந்து நிலையத்தில் சுவிசேஷத்தை சொல்வதுண்டு. அப்படியே வேலை நேரத்தில் சிறிது நேரம் மின்சாரம் தடைபட்டால் கூட உடனே வேதாகமத்தை எடுத்து வாசிப்பேன். அப்படியில்லையென்றால் அந்த கம்பெனியில் வேலை செய்கிறவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பேன். நான் சுவிசேஷத்தை சொல்லத் துவங்கும் போதே உள்ளே இருக்கும் மற்றவர்கள் பரியாசம்**


WANTED

# முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய

வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 9486588270,9486919522.

பண்ணுவார்கள். ஆனாலும் அதை பொருட்படுத்தாமல் நான் சுவிசேஷத்தை சொல்வதுண்டு. ஒரு நாள் மின்சாரம் தடைப்பட்டுப் போயிற்று. அந்த கம்பெனியில் உள்ள எல்லாருக்கும் சுவிசேஷம் சொல்லியாயிற்று. வெளியிலே உட்கார்ந்து கொண்டிருந்த நான், பக்கத்து கம்பெனிக்கு போனேன். வெளியில் வாட்ச்மேன் ஒருவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்கு ஆண்டவரை குறித்து சொல்ல ஆரம்பித்தேன். அவர் உள்ளம் நொறுங்கி அழ ஆரம்பித்தார். இப்படி ஒரு தெய்வம் இருக்கிறதென்று எனக்கு யாருமே சொல்லவில்லையே. அப்படி தெரிந்திருந்தால் என் வீட்டில் என்னைத் தவிர மற்றெல்லாரும் தற்கொலை செய்து ஒரே நாளில் மரித்திருக்கமாட்டார்கள். என்று சொல்லி என் கையை பிடித்துக்கொண்டு, ஓ...வென கதறி அழ ஆரம்பித்தார். அவருடைய நெற்றியிலே மூன்று நாமங்கள் போடப்பட்டிருந்தது. அவர் பக்திக்குரியவர் என்பதை நான் அறிந்து கொண்டேன். ஆகவே அவருக்கு சுவிசேஷத்தை சொன்ன போது இயேசுவை இன்னும் அறிந்து கொள்வதற்கு ஏதாவது புத்தகம் இருக்கிறதா என்று என்னிடம் கேட்டார். நான் ஒரு புதிய ஏற்பாட்டை எடுத்து அவரிடம் கொடுத்தேன். மூன்று நாட்கள் கம்பெனி விடுமுறை. நான்காவது நாள் அவரை பார்க்க வேண்டுமென்று அவருக்காக நான் ஜெபம் பண்ணி காலையிலே சீக்கிரமாக வந்து அவரை நான் தேடினேன். அவரை வந்து பார்த்தபோது அவருடைய கண்கள் இரண்டும் இரத்த நிறமாய் மாறியிருந்தது. அப்போது நான் அவரிடம் ஐயா உங்களுக்கு கண்வலி வந்துவிட்டதா என்று நான் கேட்டேன். தம்பி நீங்கள் கொடுத்த அந்த புத்தகத்தை மூன்று நாளும் தூங்காமல் முழுவதும் படித்து விட்டேன் என்று சொன்னார்.

*வேதாகமம் நம்முடைய கையிலே இருந்தும், அதைத் திறக்காத எத்தனையோ பேர் இருக்கிறோம். ஆனால் பாருங்கள், இந்த வேதம் எங்கேயோ யாருக்கோ அது மிகுந்த தேவையுள்ளதாய் இருக்கிறது. நாம் தேசத்திற்காக ஜெபிக்கும்போது அந்த நற்கிரியைகளை ஆண்டவர் பார்க்கிறார். ஆண்டவரே இந்தியாவை இரட்சியும் என்று சொல்வது அல்ல. முழங்காலில் நின்று ஜெபிக்க வேண்டும். முழங்காலில் நின்று ஜெபித்தால் முழங்கால் வலிக்குமே. இது உங்களையும் என்னையும் உருவாக்கின ஆண்டவருக்கு தெரியாதா..? தெரியும். முழங்காலில் நின்றால் என் மகனுக்கு, என் மகளுக்கு வலிக்கும் என்று ஆண்டவருக்கு தெரியும். பின்பு ஏன் நாம் முழங்காலில் நிற்க வேண்டும்? அது ஒரு பலியாக மாறுகிறது. உபவாசித்து ஜெபிப்பது, கண் விழித்து இரவிலே ஜெபிப்பது இதெல்லாம் தேவனுடைய பார்வையிலே பலியாக மாறுகிறது.*

*உங்கள் வாழ்க்கையில் ஆண்டவர் நல்ல கிரியைகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார். உங்களைச் சுற்றிலும் அழிந்து கொண்டிருக்கிற ஜனங்கள், கண்ணீர், வேதனை நிறைந்த ஜனங்கள், கட்டுகளிலும் காவலிலும் சிறையிருப்பிலும் சாத்தானின் பிடிக்குள்ளும்*

*இருக்கக் கூடிய ஜனங்களுக்காக நீங்கள் அனுதினமும் செய்கிறது என்ன? உங்களுக்காகவே வாழ்ந்து உங்களுக்காகவே ஜெபித்து மரித்து போனால் இயேசு துக்கமடைவார். அவர் வரும்போது அவரோடு கூட திறப்பிலே நின்றவர்களை அவரோடு கூட சுவிசேஷத்தை சுமந்து கொண்டு ஓடினவர்களை மீட்கும்படியாகத்தான் ஆண்டவர் மறுபடியும் இந்த உலகத்திலே வரப்போகிறார். இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாக பரிசுகளை கொண்டு வருகிறேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். உன்னை சந்தோஷப்படுத்த நான் பரிசுகளை கொண்டு வருவேன். நான் வெறுமையாய் உன்னை பார்க்க வர மாட்டேன். பரலோகத்தின் ஆசீர்வாதங்களை நான் கொண்டு வருவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். தூர தேசத்திற்கு போன தகப்பன் அன்பு பிள்ளைகளுக்கு வெகுமதிகளை வாங்கிக்கொண்டு வருவது போல ஆண்டவர் உன்னதத்திலிருந்து இறங்கி வரும்போது உங்கள் கண்ணீருக்குத் தக்க வெகுமதிகளை கொண்டு வருவார்.*

**என்னுடைய இருபத்தைந்தாவது வயதிலே தென்ஆப்பிரிக்கா தேசத்திலிருந்து நம்முடைய தேசத்திற்கு பிரசங்கிக்கும்படி வந்திருந்த ஒரு தேவ மனிதருடைய கூடுகையிலே நான் அமர்ந்திருந்தேன். அவர் அந்த நாளிலே அந்திய தேசத்திலிருந்து வந்து நம்முடைய தேசத்தைக் குறித்ததான அத்தனை காரியங்களையும் அப்படியே தெளிவான புள்ளிவிபரங்களாகச் சொன்னார். அதை நான் கேட்டுக்கொண்டிருக்கும் போது என் உள்ளம் நொறுங்கியது. ஏதோ ஒரு தேசத்திலிருந்து வந்தவர், என் தேசத்தை குறித்து இத்தனை தெளிவான தகவலை சொல்ல வேண்டுமானால், இந்த தேசத்தில் பிறந்த நான் இந்த தேசத்தை நேசியாமல் இருப்பது எத்தனை வேதனையான ஒரு காரியம். அதுமாத்திரமல்ல அவர் வாலிபனாய் இருந்த நாட்களிலே அவர் போன ஆலயத்திலே துண்டுப் பிரதிகள் ஆலயத்தின் வெளிப்புறத்தில் வைத்திருந்தார்களாம். இந்தியாவிலே தமிழ்நாட்டில் நடக்கக் கூடிய ஒரு ஊழியத்தை குறித்ததான துண்டுப்பிரதிகள் கட்டாக இருந்ததாம். ஆலயம் முடிந்து போகும் போது ஜனங்கள் ஒவ்வொன்றாக எடுத்து கொண்டு போனார்களாம். யாரோ ஒருவர் மூலமாக தென் ஆப்பிரிக்கா தேசத்திற்கு அந்த துண்டுப் பிரதி சென்றிருக்கிறது. ஒரு ஆலயத்தை கட்ட அஸ்திபாரம் போட்டிருக்கிறார்கள். ஆலயத்தை கட்டுவதற்கு இத்தனை இலட்சம் பணம் வேண்டும் மக்கள் ஆராதிக்க இடமில்லாமல் இருக்கிறார்கள் என்று அதைக்குறித்த குறிப்புகள் அதில் இருந்ததாம். அதை அவர் வாலிபனாய் இருந்த போது பார்த்தாராம். இந்தியாவில் ஆலயம் இல்லாமல் ஜனங்கள் மரத்தடியில் ஆராதிக்கிறார்களே நம் தேசத்தில் அருமையான ஆலயம் கட்டியும் ஆராதிக்க ஆள் இல்லாமல் இருக்கிறோமே, நாம் எப்படியாவது அந்த ஆலயத்தை கட்ட வேண்டுமென்று பிரயாசப்பட்டு நண்பர்கள் உறவினர்களிடத்தில் அந்த துண்டுபிரதியை காண்பித்து இந்தியாவில் தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் ஆலயம் கட்டுகிறார்கள் அதற்கான உதவிகளை செய்யுங்கள் என்று கேட்டாராம்.**

யாருமே அவர் சொன்னதை கேட்டு செவிசாய்க்கவில்லை. அவருடைய உள்ளத்திலே ஒரு வைராக்கியம் உண்டானது. இந்த ஆலயத்தை நான் எப்படியாவது கட்ட வேண்டும் என்று உறுதி எடுத்தார். அவருடைய தகப்பனாரிடத்தில் போனார். அப்பா நான் இந்தியாவில் தமிழ்நாடு என்ற இடத்தில் ஒரு ஆலயத்தை கட்ட போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவருடைய அப்பா அவரிடம் நீ சிறுவன் உனக்கு இன்னும் நிறைய பொறுப்புகள் இருக்கிறது. உனக்கு ஏன் இந்த தேவையில்லாத வேலை? என்றாராம். அவரோ நான் கண்டிப்பாக இந்த ஆலயத்தை கட்டி முடிப்பேன் என்னை தடை செய்யாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறார். அவருடைய அப்பாவும் சரி உன்னுடைய விருப்பம் நீ போ என்று அனுப்பிவிட்டார். அவர் கையில் இருந்த விலையுயர்ந்த பொருட்கள், மற்றும் தங்க நகைகள் எல்லாவற்றையும் விற்பனை செய்து ஒரு தொகையை சேர்த்தார். அதை அந்த முகவரிக்கு சரியாக அனுப்பி விட்டு கடிதத்தின் வாயிலாக தொடர்பு கொண்டு அவர்களுக்கு தெரிவித்தார். வேலையும் தொடங்க ஆரம்பித்தது. வேலை செய்ய செய்ய அவர்கள் புகைப்படம் எடுத்து அவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அவர் பார்த்துகொண்டார். ஆலயம் கட்டப்படுகிறது இன்னும் கொஞ்சம் கட்ட வேண்டும் அடுத்த கட்டமாக அவர் கையில் இருந்த கார் நல்ல பைக் நல்ல சைக்கிள் எல்லாவற்றையும் விற்பனை செய்து பணத்தை அனுப்பி விட்டார். மறுபடியும் அந்த ஆலயம் கொஞ்சம் கொஞ்சமாக கட்டி மேற்பகுதி மூடப்பட்டது. இப்போது பூச்சு வேலை இருக்கிறது. கதவு ஜன்னல் பெயிண்ட் அடிக்க வேண்டும். அந்த தேவைக்காக அவர் அந்த தேசத்திலே விலை மதிக்க முடியா ஓவியங்கள் அநேகர் உருவாக்கின கைவினைப்பொருட்கள் எல்லாம் ஏலம் எடுத்து அதை தன்னுடைய வீட்டிலே அலங்கார பொருட்களாக வைத்திருந்தார். அதையெல்லாம் கொண்டு போய் சந்தைவெளியில் நின்று நான் இத்தனை இலட்சம் ரூபாய்க்கு இந்த ஓவியத்தை ஏலம் எடுத்தேன். இந்த பொருள் உங்களுக்கு வேண்டுமா என்று சொல்லி கூவி கூவி அதை விற்பனை செய்து தன்னிடத்தில் உள்ள நல்ல வஸ்திரங்களையெல்லாம் கொண்டு போய் விற்பனை செய்து, மேலும் எதையெல்லாம் விற்க முடியுமோ அதையெல்லாம் விற்பனை செய்து அந்த பணத்தை அனுப்பி விட்டார்.

இப்போது அந்த ஆலய வேலை எல்லாம் முடித்து இன்னும் கடைசி பகுதி வேலை இருக்கிறது. அந்த தேசத்திலே நம்மை போல இலவசமாய் இரத்ததானம் செய்யக் கூடியவர்கள் இல்லை. அதினிமித்தமாக மனிதனுடைய சரீரத்தில் ஏற்றக் கூடிய இரத்தத்திற்கு ஏராளமான விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. நம்முடைய தேசத்தினுடைய பண மதிப்பிற்கு பல இலட்சங்கள் வரை இரத்தத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அதிலும் அவருடைய சரீரத்திலிருக்கிற இரத்தவகை மிகவும் அரிதான ஒன்று. அதற்கு இன்னும் விலை அதிகமாக பெற முடியும். கடைசியாக இந்த வாலிபர் ஒரு இரத்த வங்கி உள்ளே சென்றார். ஐயா என் சரீரத்திலிருந்து இரத்தத்தை எடுத்துக்கொண்டு பணத்தை தர முடியுமா? என்று சொல்லி கேட்ட போது, அவர்கள் உங்களை பரிசோதித்து விட்டு எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லி இரத்தம் எவ்வளவு

**அளவு எடுக்க முடியுமோ அந்த அளவு எடுத்து விட்டு உங்களுக்கு பணத்தை கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அவர் தன்னுடைய இரத்தத்தை விற்பனை செய்தார் அந்த ஆலயத்தினுடைய மீதமுள்ள வேலைக்கு அந்த பணம் கொடுக்கப் பட்டது. அந்த ஆலயம் முழுவதும் கட்டி முடிக்கப்பட்டது அதனுடைய பிரதிஷ்டை நாளிலே அந்த தேவமனிதர் அந்த ஆலயத்திற்கு வந்தார்.**

*ஆலயத்தைக் கட்டும்படியாக பிரயாசப்பட்டவர்கள், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும்படியாக நேரத்தை கொடுத்தவர்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கும்படியாக தேவனை நோக்கி உபவாசித்து திறப்பிலே நின்றவர்கள்இப்படிப்பட்டவர்களை சந்திப்பதற்காகத்தான் நம் ஆண்டவர் மறுபடியுமாக இந்த உலகத்திலே வரப்போகிறார். சோம்பேறிகளை அல்ல, சுகபோக விரும்பிகளை அல்ல, அவருக்காக பாடுகளை சகித்தவர்களை மீட்கும்படியாக ஆண்டவர் இந்த உலகத்திலே மறுபடியுமாக வருகிறார். ஒரே ஒரு வாழ்க்கை ஒரே ஒரு சந்தர்ப்பம் இந்த வாழ்க்கை யாருக்காக என்பதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் யாருக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் வாழ்க்கையினுடைய நோக்கம் என்ன? எத்தனை காலம் இந்த பூமியிலே நீங்கள் தங்கி தாபரித்திருப்பீர்கள். பூமியிலே போராடுகிறதற்கு மனிதனுக்கு இவ்வளவு காலங்கள் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. யோபு பக்தன் சொல்லுகிறான்.* ***அவனுடைய நாட்கள் இம்மாத்திரம் என்று குறிக்கப்பட்டிருக்கையால், அவனுடைய மாதங்களின் தொகை உம்மிடத்தில் இருக்கிறது; அவன் கடந்து போகக் கூடாத எல்லையை அவனுக்கு ஏற்படுத்தினீர். – யோபு 14:5*** *ஒரு மனிதனுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் காலங்களின் தொகை வருடங்களின் தொகை, நாட்களின் தொகை, இவ்வளவுதான் என்பதை ஆண்டவர் தாயின் கருவில் வெளிப்படும் நாளிலே நியமித்திருக்கிறார். அந்த நாள் வரும்போது நம்முடைய ஜீவன் நம்மை விட்டு பிரிந்து போய்விடும். நித்திய நித்திய காலமாய் நாம் இங்கு தங்கி தாபரிக்க முடியாது. ஒரே ஒரு வாழ்க்கை ஒரே ஒரு சந்தர்ப்பம்.*

*இயேசுவுக்காக தன்னை தியாகம் செய்தவர்கள் இயேசுவுக்காக நற்கிரியைகள் செய்தவர்கள் பரலோகத்திலே போய் இளைப்பாறும்படிக்கு அவர்களுக்காக எல்லாவற்றையும் அவர் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். அவர் மறுபடியும் வந்து அவர்களை அழைத்துகொண்டு போய் இளைப்பாறப்பண்ணப்போகிறார். அது தான் இந்த உலகத்திலே நடக்க போகிறது. அதுதான் உண்மையான காரியம். நற்கரியைகளுக்கு இந்த பூமியிலே ஆண்டவர் நன்மைகளை தருகிறார். அதுவே மெய்யான காரியம்* ***என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்து கொள்ளுவான் – மத். 19:29*** *ஒரு மடங்கு அல்ல. நான் நூறுமடங்காய் திருப்பி கொடுப்பேன். மறுமையிலும் நித்திய ஜீவனை கொடுப்பேன்*

*என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆண்டவருக்காக நான் இழந்து வெறுமையாய் போய் விட்டேன். நான் ஒன்றுமில்லாமல் ஆகி விட்டேன் என்று ஒருவரும் சொல்ல முடியாது.*

ஊழியத்தினுடைய ஆரம்ப காலம். அந்த நாட்களிலே ஒரு ஆலயம் கட்ட நிலம் வாங்குவதற்கு இருபத்தைந்தாயிரம் பணம் தேவைப்பட்டது. அப்பொழுது நான் ஒரு குறிப்பிட்ட பட்டணத்திலே ஞாயிற்றுக்கிழமை ஊழியத்தை நிறைவேற்றும்படியாக சென்றிருந்தேன். அந்த சமயத்தில் ஆண்டவர் என்னோடு கூட இடைபட ஆரம்பித்தார். அதற்காக நான் கருத்தாய் ஜெபித்தேன். ஆலயத் தேவையைக் குறித்து நீ மக்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று என்னைத் தூண்டினார். ஏனென்றால் தீர்மானிக்கப்பட்ட அந்த நிலத்தை வாங்குவதற்கு இன்னும் ஏழு நாட்கள் மாத்திரமே அவகாசம் இருந்தது. இருபத்தைந்தாயிரம் தேவை என்பது அந்த நாட்களிலே இருபத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு சமமாக இருந்தது. ஏனென்றால் அது ஆரம்ப கால ஊழியம். அந்த இடத்திலே கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முன்பாக பணித்தளத்தினுடைய காரியங்களை நான் தெளிவாக சொன்னேன். ஊழியத்தை முடித்த பின்பு, அந்த நேரத்திலே ஒரு தாயார் என்னை சந்திக்கும்படி வந்தார்கள். தம்பி, நீங்கள் சொன்ன அந்த ஆலயத்திற்கு நிலம் வாங்குவதற்கு இருபத்தைந்தாயிரம் பணத்தை எங்கள் குடும்பத்தின் சார்பில் நான் தருகிறேன். என்னுடைய வீடு இந்த தெருவிலிருந்து இரண்டாவது பின்பகுதியில் இருக்கிறது. நான் ஓய்வு பெற்ற ஆசிரியை என்று சொல்லி என்னுடைய வீட்டில் வந்து ஜெபம் பண்ணி வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். சரி என்று நான் அவர்கள் வீட்டிற்கு சென்றேன். நான் அந்த இடத்திற்கு போன போது ஒரு பெருத்த ஏமாற்றம். அவர்கள் ஏதோ பெரிய ஐசுவரியவானாக இருப்பார்கள் என்று நினைத்தேன். அவர்கள் சொந்த வீட்டில் இருப்பார்கள் என்று நினைத்தேன். அவர்கள் வாடகை வீட்டில் தான் இருந்தார்கள். அங்கே போன போது கண்ணீரோடு அவருடைய அனுபவத்தை சொன்னார்கள். தம்பி, ஒரு நிலத்தையாவது வாங்கி வீடு கட்டிவிட வேண்டுமென்று மிகவும் பிரயாசப்பட்டு கொஞ்சம் பணத்தை நான் சேர்த்து வைத்திருந்தேன். அந்த சமயத்தில் என்னுடைய கணவருடைய உடன் பிறந்த சகோதரர் வியாதிப்பட்டு படுக்கையில் இருந்தார் அந்த பணத்தையெல்லாம் என்னுடைய கணவர் மருத்துவமனைக்கு செலவழித்து விட்டார். இலட்சங்கள் முடிந்து இப்போது வெறும் இருபத்தைந்தாயிரம் ரூபாய்தான் எங்கள் வீட்டில் இருக்கிறது. இதைக் கொண்டு கர்த்தருடைய வீட்டைக்கட்ட வேண்டும் என்று தீர்மானித்தேன் என்று சொல்லி என்னுடைய கையில் கொடுத்தார்கள். மாலையில் என் பேரப்பிள்ளைகளுக்கு பால் வாங்க கூட பணமில்லை என்று சொல்லி அழுதார்கள். அது என் உள்ளத்தை மிகவும் உடைத்தது. அந்த பணத்தை வாங்க என் கைகள் கூசியது. அதை வாங்கிக்கொண்டு வந்து அந்த ஆலயத்திற்கான இடத்தை வாங்கினோம். ஆனால் இரவு பகலாக தேவ சமூகத்தில் நிற்கும்போதெல்லாம் அந்த தாயாருடைய முகம்தான்

**என் கண்களுக்கு முன்பாக வரும். அவர்களுக்காக நான் ஜெபித்துக்கொண்டேயிருப்பேன்.**

**ஒரு சில மாதங்கள் கடந்தது ஒருநாள் அவர்கள் தொலைபேசி மூலமாக என்னை தொடர்பு கொண்டார்கள். அல்லேலூயா கர்த்தருக்கு மகிமை. ஆண்டவர் எனக்கு சொந்த நிலம் மட்டுமல்ல அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு வீட்டையும் எனக்கு தந்திருக்கிறார் என்று சொன்னார்கள். இது எப்படி நடந்தது என்று நான் கேட்ட போது என் கணவர் என்னை திருமணம் செய்த நாளிலிருந்து சொல்லுவார். நமக்கு சொத்து வரும். அதற்கான வழக்கு நடக்கிறது என்று சொல்லுவார். அவருடைய தகப்பனார் காலத்தில் இருந்து நடந்த வழக்கு முடிவுக்கு வந்து எங்களுடைய மொத்த தேவைகளையும் ஆண்டவர் சந்தித்து விட்டார். அதனால் நீங்கள் வரும்போது என்னை சொந்த வீட்டில் பார்ப்பீர்கள் என்று சொன்னார்கள்.**

*ஆண்டவர் வாங்கி அப்படியே வைத்துக்கொண்டு உங்களை வெறுமையாய் அனுப்பி விடுகிறவரல்ல. நூறத்தனையாய் உங்களுக்கு இந்த பூமியிலே அவர் சரிகட்டக் கூடியவர் ஆண்டவருக்கு கொடுப்பதை பார்க்கிலும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள குறுக்கு வழி எதுவுமே இல்லை. வேறு எந்த வழியிலும் நீங்கள் ஆசீர்வாதத்தை பெற முடியாது. ஒரே குறுக்கு வழி அவருக்கு முறையாக கொடுப்பது தான். தேவையுள்ள இடத்திற்கு சரியாக ஜெபம் பண்ணி தீர்மானித்து நீங்கள் கொடுக்கும் போது அதற்குரிய பிரதிபலனை ஆண்டவர் உங்கள் வாழ்க்கையிலே கொண்டு வருவார்.*

***ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதமுள்ளவரல்லவே. – எபிரேயர் 6:10*** *உங்களிடத்தில் உள்ள நல்ல கிரியைகளை தேவன் மறந்து விடுகிறதற்கு அவர் அநீதமுள்ளவர் அல்ல. மனிதன் மறந்து விடுவான். மனிதனுக்கு உதவி தேவைப்படும் போது மிகவும் மகிழ்ச்சியாக சந்தோஷத்தை வெளிப்படுத்துவான். ஆனால் அதோடு சரி. அவர்கள் உதவியை பெற்றுக்கொண்டு போய்விடுவார்கள். பின்பு, எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள்.*

*ஆனால் நம்முடைய ஆண்டவர் அப்படிப்பட்டவர் அல்ல. அவர் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்து வருகிற செய்கிற ஒவ்வொரு நல்ல கிரியையையும் அவர் தம்முடைய கணக்கிலே வைத்து அதை நூறத்தனையாக உங்களுக்கு கொடுப்பார். ஆகவே நீங்கள் கர்த்தருக்கென்று ஒரு காரியத்தை செய்யும் முன்னே நீங்கள் ஜெபம் பண்ணி செய்வது ஏற்றதாய் இருக்கும்.*

**ஒரு வாலிபன் கம்பெனியில் வேலை செய்த நாட்களில் சம்பளம் வாங்கினால் தசம பாகம் பிரித்து எடுத்து வைத்து மொத்தமாக சேர்ந்த பின்பு ஆண்டவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்வது அவனுடைய வழக்கம். அப்படி ஒரு நாளிலே அவன் தசம பாகத்தை வைத்து ஆண்டவரே நான் இதை யாருக்கு கொடுக்க வேண்டுமென்று ஜெபித்தானாம். ஆண்டவர்**

அவனிடம் தூரத்தில் ஒரு போதகர் இருப்பதை ஞாபகப்படுத்தினாராம்.

மதிய நேரத்தில் காணிக்கையை எடுத்து கொண்டு அவரைப் பார்ப்பதற்காக அவன் சென்று கதவை தட்டினபோது, அவர்கள் கதவை திறந்தார்கள். அப்போது, அந்த போதகர் அவருடைய மனைவி அவருடைய மூன்று பிள்ளைகள் எல்லோரும் வட்டமாக அமர்ந்திருந்து ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். நடுவில் ஆற்றுமணல் கொஞ்சம் கொட்டி வைத்து அதன் மீது மண்பானை வைத்து அதில் தண்ணீர் ஊற்றி வைத்திருக்கிறார்கள். பசி வரும்போது தண்ணீரை எடுத்து குடித்து கொள்வார்கள். அதன்பின்பு ஜெபம் செய்வார்கள். மூன்று நாட்களாக அவர்கள் சாப்பிட ஒன்றுமில்லாதிருந்தார்கள். அந்த சூழ்நிலையில் அவர் மனைவி அவருக்கு விரோதமாக ஒன்றும் பேசவில்லை.

பிள்ளைகள் நீங்கள் ஊழியம் செய்ய வேண்டாம் வேலைக்கு போங்கள் என்று சொல்லவும் இல்லை. அவர்கள் எல்லோருமே ஒருமனப்பட்டு கர்த்தருடைய சமூகத்திலே எலியாவுக்கு இறைச்சியையும் அப்பத்தையும் கொடுத்த ஆண்டவர் நம்மையும் போஷிக்க ஒரு காகத்தை அனுப்பி விடுவார் என்று அவர்கள் காத்திருந்தார்கள். மூன்றாவது நாள் அந்த வாலிபன் மூலமாக தேவன் அவர்கள் தேவையை சந்தித்தார்.

*பிரியமானவர்களே, நாம் காணிக்கை கொடுக்கும்போது ஜெபம் பண்ணி தேவனுடைய ஆலோசனையின்படி கொடுக்க வேண்டும். பெயர் புகழுக்காகவோ, அல்லது பிரபலமான ஊழியத்திற்குத்தான் கொடுக்க வேண்டுமென்றோ தீர்மானிக்காமல் தேவ சித்தத்தின்படி கொடுக்க வேண்டும். அப்பொழுது தேவன் நூறுமடங்காக கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பார். ஆண்டவருக்கென்று கொடுக்கிற, விதைக்கிற ஒவ்வொரு காணிக்கையையும் அவர் கணக்கிலே வைத்து உங்களை ஆசீர்வதிப்பார். அவர் அப்படியே வாங்கி வைத்துக்கொள்கிறவர் அல்ல. அவர் உங்கள் நற்கிரியைகளை மறந்து விடுகிற தேவன் அல்ல. அதற்கு சரியாக உங்களை, உங்கள் பிள்ளைகளை உங்கள் கைகளின் பிரயாசங்களை அவர் பல மடங்காக ஆசீர்வதித்து விருத்தியடையப் பண்ணுவார். அப்படிப்பட்டவர்களை கணக்கிலே வைத்து*


## கர்நாடகா தாவங்கரையில்
# சிறப்புக் கூடுகை

**நாள் : 23,24–04–22**
**சனி, ஞாயிறு**
தினமும் மாலை 6 மணி முதல் 8 மணி வரை
(ஞாயிறு காலை 9 முதல் 11.30 மணி வரை)

செய்தியும் – ஜெபமும்:
சகோ. **T.ஆசீர் ஞானராஜ்**

**இடம்: ஜான் மெமோரியல் பாப்டிஸ்ட் ஆலயம், ஜாலி நகர், தாவங்கரை, கர்நாடகா.**

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!
தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!

*ஞாபகப்புத்தகத்திலே எழுதி வைத்திருக்கிறார். இந்த உலகத்தின் முடிவு நாட்களிலே நியாயத்தீர்ப்பு செய்யும் நாள் வரும்போது அந்த ஞாபகப்புத்தகம் திறக்கப்படும். அதிலே நீங்கள் செய்த நல்ல கிரியைகளெல்லாம் எழுதப்பட்டிருக்கும் அதற்கு ஏற்றவிதமான பிரதிபலனை ஆண்டவர் உங்களுக்கு கொண்டு வருவார். நற்கிரியைகளை அவர் மறந்து விடுகிற ஆண்டவர் அல்ல. மனிதனைப் போல மறக்கிறவர் அல்ல. அவர் திரும்ப கொடுக்கிற ஆண்டவர்.*

**ஒரு முறை நான் சென்னை பட்டணத்தில் ஊழியத்தை நிறைவு செய்து இரயிலில் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அது ஊழியத்தின் ஆரம்ப காலம். ஒரு குறிப்பிட்ட விக்கிரக கோவில் இருப்பிடம் வந்தபோது அங்கு செல்லும் மக்கள் கூட்டம் கூட்டமாக அந்த இரயில் நிலையத்தில் ஏறினார்கள். இரயில் முழுவதும் எங்கு பார்த்தாலும் அந்த மக்கள் தான் உட்கார்ந்திருந்தார்கள். விடியற்காலை சமயத்தில் நான் கழிவறை செல்வதற்காக சென்ற போது அதன் முன்பகுதியில் ஒரு தங்க செயின் அறுந்து விழுந்து கிடந்தது. அது தாலி செயின் போல தெரிந்தது. கிட்டத்தட்ட நான்கு அல்லது ஐந்து பவுன் இருக்கலாம். அதை யாரோ ஒருவர் தொலைத்திருக்கிறார்.**

**இப்போது அந்த இரயிலில் அங்குமிங்குமாக போய்கொண்டிருக்கிற போலீசாரைப் பார்த்து இது யாருடையது என்று கேட்டு கொடுத்து விடுங்கள் என்று சொல்லி அவரிடம் கொடுத்தால் அவர் அதை கொண்டு சென்று விடுவார். இது யாருடையது என்று ஜனங்களிடம் கேட்டால் எல்லோரும் என்னுடையது என்று சொல்லுவார்கள். நான் அதை இழந்தவருக்கு சரியாக கொடுக்க வேண்டும். அந்த பொருளை நான் கையில் வைத்துக்கொண்டு தூக்கமில்லாமல் கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம் அந்த கழிவறை அருகிலே நின்றுகொண்டிருந்தேன். நிறைய பேர் வருகிறார்கள் போகிறார்கள் என்னை திருடனைப் பார்ப்பதைப் போல பார்த்துக்கொண்டு சிலர் போகிறார்கள்.**

**பொழுது விடியும் நேரம் வந்தது. ஒரு சிலர் ஐயோ ஐயோ என்று பதறிக்கொண்டு ஓடி வந்தார்கள். வந்து எதையோ தேடிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் என்ன தேடுகிறீர்கள் என்று கேட்டேன். என் செயின் தொலைந்து விட்டது என்று சொன்னார்கள்.**

**அப்போது நான் செயினை காண்பித்து இது உங்களுடையதா பாருங்கள் என்று சொன்னேன். அவர்கள் இது என்னுடையதுதான் என்று வாங்கிக் கொண்டார்கள் அவர்களுக்கு அவ்வளவு சந்தோஷம். யாருமே கொடுக்க மாட்டார்களே நீங்கள் யார் என்று கேட்டார்கள். நான் இயேசுவினுடைய பிள்ளை என்று சொன்னேன். இது என் கையில் கிடைத்து இரண்டரை மணி நேரமாக நான் இங்கு காத்துக்கொண்டிருக்கிறேன்என்றேன். அது மாத்திரமல்ல, இயேசுவைக் குறித்து அந்த இடத்திலே சுவிசேஷம் அறிவிக்கும்படிக்கு ஆண்டவர் எனக்கு அனுக்கிரகம் பாராட்டினார். அவர்கள் அனைவருடைய உள்ளம் தொடும்படிக்கு ஆண்டவர் கிரியை செய்தார்.**

*ஆம், பிரியமானவர்களே! உங்கள் நற்கிரியைகளை மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதமுள்ள தேவன் அல்ல. எந்த விதத்திலெல்லாம் நீங்கள் கர்த்தருக்கென்று நற்கிரியை செய்ய இயலுமோ நீங்கள் அதை செய்யும் போது அதற்குரிய பிரதிபலனை ஆண்டவர் நிச்சயமாக உங்கள் வாழ்க்கையிலே கொண்டு வந்து உங்களை ஆசீர்வதிப்பார்.*

# பணித்தளச் செய்திகள்

## ஓடிசா மாநிலம்

### ஜம்முகுடா பணித்தளம்

**ஜம்முகுடா:**

- உப்பாய் என்பவருக்கு விரோதமாக பில்லிசூனியம் செய்திருந்தனர். இதனால் மிகவும் சரீர பெலவீனமாக இருந்தார். ஜெபத்தினால் கர்த்தர் சுகம் கொடுத்தார்.
- ஜிதோ என்பவரது மகள் விமிமா பேருந்தில் செல்லும்போது மயங்கி விழுந்து விட்டார். ஆனாலும் ஒரு தீங்கும் அணுகாதபடி கர்த்தர் காத்துக் கொண்டார்.
- சந்தோஷ் என்பவர் வியாதியோடிருந்தார். ஜெபத்தினால் கர்த்தர் சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.
- இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெறுகிறது. வெள்ளி உபவாச ஜெபம் நடைபெறுகிறது. 25 பேர் கலந்து கொள்கின்றனர்.
- சந்தோஷ் என்ற சகோதரனுடைய மனைவி, பிள்ளைகள் ஆராதனைக்கு வருகின்றனர். இவர் மட்டும் வருவதில்லை. இவருக்காக ஜெபிக்கவும்.
- சந்தோஷ் என்பவரின் தகப்பனார் பிசு முன்பு ஆராதனைக்கு வந்து கொண்டிருந்தார். ஆனால் இப்போது ஆராதனைக்கு வராமல் பின்மாற்றமாகி, குடிபோதைக்கு அடிமைப்பட்டுள்ளார். இவரின் இரட்சிப்புக்காக ஜெபிக்கவும்.
- ராஜேஷ் என்பவர் நமது மூலமாக இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார். ஆனால் இப்போது நமது சபைக்கு வருவதில்லை. இவரது தாய் தகப்பன் நமது சபைக்கு வருகின்றனர். இவர்கள் குடும்பமாக நமது ஆலயத்திற்கு வரும்படி ஜெபிக்கவும்.
- ஜோஹன் என்பவர் அதிகமாக குடிக்கிறார். சரியாக ஆலயத்திற்கு வருவதில்லை. இவர் குடிப்பழக்கத்தை விடவும், தொடர்ந்து ஆலயத்திற்கு வரும்படியாகவும் ஜெபிக்கவும்.
- தானியேல் மற்றும் அவரது மனைவி ஆலயத்திற்கு வருவதில்லை. இவர்களுக்காக ஜெபிக்கவும்.
- அம்பிரி என்பவர் ஆராதனைக்கு வருகிறேன் என்று கூறுகிறார். இவர் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.

**ஜொக்கிபாரி:**

- ஒருவிசுவாசி சகோதரி கிராமத்தினருக்கு பயந்து ஆராதனைக்கு வருவதில்லை. இவர்கள் பயம் நீங்கவும், ஆராதனைக்கு வரும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ராமி என்ற சகோதரியின் மகன், மகள்கள் ஆராதனைக்கு வருகின்றனர். இந்த சகோதரி மிகுந்த எதிர்ப்பு தெரிவித்து வருகிறாள். இவர்களுக்காக ஜெபிக்கவும்.

- லிங்கானா, சொன்யா ஆகியோர் சுவிசேஷத்திற்கு மிகுந்த எதிர்ப்பு தெரிவித்து இக்கிராமத்தில் ஆலயம் கட்டவிடமாட்டோம் என்கின்றனர். இவர்கள் மூலமாக கிரியை செய்கிற சத்துருவின் கிரியை அழிக்கப்பட ஜெபிக்கவும்.
- பொந்து, எட்டு ஆகியோர் தரணி பூஜை செய்து வருகின்றனர். இவர்கள் மூலமாக அநேக ஜனங்கள் பின்மாற்றமாகி விக்கிரக ஆராதனை செய்கின்றனர். இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்கவும்.

**கோனாகாவ்:**

- இக்கிராமத்தில் பந்து என்பவர் வேறொரு கிராமத்திற்கு ஆராதனைக்கு செல்கிறார். மேலும் அநேகர் இங்கு ஆராதனை நடத்த வரும்படி அழைக்கின்றனர். இக்கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.
- இங்கு மொசோ என்பவர் பில்லிசூனியம் செய்பவர். விக்கிரக கோவில் ஒன்றையும் ஏற்படுத்தி உள்ளார். இக்கிராமத்தில் கிறிஸ்தவர்கள் வருவதற்கும் ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் இவர் தடையாக இருக்கிறார். இவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## சுவிசேஷ ஊழியம்

- டப்பா, பந்தேல்பாடு, டெங்கியா, கினிபர், மெட்டாகுடா, கிராம், புல்லிகொண்டா ஆகிய கிராமங்களில் இயேசுவைப் பற்றி அறிவித்து, கைப்பிரதிகள் கொடுத்தோம். இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்கவும்.

## நபரங்கபூர் பணித்தளம்

**இந்திரா காலனி:**

- இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெற்று வருகிறது. இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட்டு சபைக்கு வரும்படி ஜெபியுங்கள்.
- மொயினா என்ற குழந்தைக்கு (1வயது) அதிகமாக காய்ச்சல் இருக்கிறது. எப்போதும் அழுதுகொண்டு இருக்கிறாள். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- நரஹரி என்ற விசுவாசி எப்போதும் கெட்ட சொப்பனம் காண்கிறார். இதனால் மிகவும் பயப்படுகிறார். இவருக்காக ஜெபியுங்கள்.
- விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்பட, கர்த்தருக்குள் வளரும்படியாக ஜெபிக்கவும்.

**ஹாட்சுக்கு:**

- இக்கிராமத்தில் சதா கேமுடு என்பவருக்கு மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. கர்த்தர் விடுதலை கொடுக்க ஜெபிக்கவும்.
- இங்கு இரண்டு குடும்பம் கிறிஸ்தவர்களாக உள்ளனர். இங்கு அதிகமான எதிர்ப்பு காணப்படுகிறது. இக்கிராம மக்கள் தங்களுக்கு ஆராதிக்கும் படியாக இடம் இல்லை. எங்களுக்கு ஒரு ஆலயம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

**பொடமண்டா:**

- இக்கிராமத்தில் கமலேச்சன் கலரி என்பவருக்கு பக்கவாத நோய் ஏற்பட்டுள்ளது. கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- இக்கிராமத்தில் பதுமன் என்பவர் விக்கிரக கோவிலில் பூசாரி மற்றும் கடவுளைப்பற்றி ஜனங்களுக்கு கற்றுக் கொடுத்து

வருகிறார். நாங்கள் இவரிடம் சென்று இயேசுவைப் பற்றி அறிவித்தோம். ஆர்வமுடன் கேட்டார். கர்த்தர் இந்த சகோதரனை தொடும்படியாக ஜெபியுங்கள்.

**அர்ணா:**

- இக்கிராமத்திலுள்ள கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது. ஆனால் ஆலயத்தில் சென்று இயேசுவை ஆராதிப்பதற்கு தடை போடப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் தடைகள் மாறவும் ஜனங்கள் ஆலயத்தில் சென்று ஆராதிக்கும்படியாக ஜெபியுங்கள்.

**புர்ஜா:**

- போண்டோ கொமார் என்பவரது மனைவிக்கு விரோதமாக பில்லிசூனியம் செய்துள்ளனர். இதன் காரணமாக கால்களில் வலி ஏற்பட்டு நடக்கமுடியாமல் கஷ்டப்படுகிறார்.
- பிரிஸ்கில்லா என்ற தாயார் வயது அதிகமாக இருப்பதால் மிகுந்த பெலவீனமாக உள்ளார்கள். கர்த்தர் இவர்களை பெலப்படுத்தும்படி ஜெபிக்கவும்.
- சோபிலால் நாக் என்பவர் சரீரத்தில் மிகவும் பெலவீனமாக உள்ளார். இவருக்கு கண்பார்வை சரியாக இல்லை. இவருக்கு கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- ஹபுலா ரேலி என்பவர் புதிதாக ஆராதனைக்கு வருகிறார். இவர் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவும், விசுவாசத்தில் வளரவும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெறும்படியாகவும் ஜெபியுங்கள்.

**தேவைகள்:**

- ஹரிஜன் கபரத்தன், கிலேச்சன் ஹரிஜன் ஆகிய இரண்டு குடும்பத்தினர் புதிதாக ஆராதனைக்கு வருகின்றனர்.
- இங்கு ஒரு ஆலயம் கட்டப்பட வேண்டும். இதற்காக ஜெபியுங்கள்.

## லம்டாபுட் பணித்தளம்

**லம்டாபுட்:**

- இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெறுகிறது. கடந்த பிப்ரவரி மாதம் 5 பேர் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர்.
- பூர்ணோ என்பவருக்காக ஜெபித்தோம். இப்போது சண்டையில்லாமல் சமாதானமாக இருக்கிறார். ஆலயத்திற்கும் வருகிறார்.
- பவுல் என்பவருக்காக ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அவருக்கு நல்ல சுகத்தை கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.
- இவரது மூத்த மகன் ப்ரீ என்ற சிறுவன் நவோதயா பள்ளியில் படிப்பதற்காக தேர்வு எழுதியுள்ளான். அவன் தேர்ச்சி பெற்று அந்த பள்ளியில் இடம் கிடைக்க ஜெபிக்கவும்.
- மேலும் இவர்களது வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு 6 மாதமாகியும் மீண்டும் கொடுக்கவில்லை. இதற்காக ஜெபிக்கவும்.
- சொளுப்பா என்ற சகோதரியினுடைய திருமணத்திற்காக நல்ல மாப்பிள்ளை கிடைக்கும்படியாக ஜெபிக்கவும்.
- மீரா என்ற சகோதரி மனநிலை பாதிக்கப்பட்டு மிகவும் மோசமாக உள்ளார்கள். கர்த்தர் விடுதலை கொடுக்க ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. மேகதாது அணை விவகாரத்தில் தமிழகம், கர்நாடகா இடையே சுமூக முடிவு எட்டினால் மட்டுமே சுற்றுச்சுழல் அனுமதி வழங்கப்படும் என மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.
2. 5 மாநில சட்டசபை தேர்தலில் 4 மாநிலங்களை கைப்பற்றி பா.ஜனதா அமோக வெற்றி பெற்றுள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி வெற்றி பெற்று புதிய சரித்திரம் படைத்துள்ளது.
3. பூமியை துல்லியமாக கண்காணிக்கும் அதிநவீன ரேடார் செயற்கைக்கோளுடன் பி.எஸ். எல்.வி.சி52 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. மேலும் 2 சிறிய ரக செயற்கைக்கோளும் அனுப்பப்பட்டது.
4. ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்பொருட்களுக்கு ஜுலை 1ம் தேதி முதல் தடை விதிக்கப்பட்டு உள்ளது. எனவே அதன் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
5. மலேசியா,ஈரான், புரூனே மற்றும் பூட்டான் ஆகிய 4 நாடுகளிலும் கொரோனா பரவல் அதிகரித்து வருவதன் காரணமாக அந்த நாடுகளை அதிக ஆபத்து மிகுந்த பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது. இதன் மூலம் அமெரிக்கர்கள் மேற்கூறிய 4 நாடுகளுக்கு பயணப்படுவதை தவிர்க்க வேண்டும் என அந்த நாடு அறிவுறுத்தியுள்ளது.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
“CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT” என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM,
CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 98435 80077 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஒசூர் | – 90369 43712 |
| திருவள்ளுர் | – 94451 49642 |
| பெங்களுரு | – 90369 43712 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 98435 80077 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.







ஒடிசா இராயகடா மாவட்டத்தில் நமது களிசேவை குழுவினர்

Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.03.2022. Posted at Mudalur P.O. on 14th and 15th of every month.

## ஒட்டன்சத்திரத்தில்...

# எழுப்புதல் ஜெப அக்கினி முகாம்

**26.03.2022**
**சனிக்கிழமை**
மாலை 6 மணி முதல் 9 மணி வரை

**27.03.2022**
**ஞாயிற்றுக்கிழமை**
காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை



**விசுவாசிகளின் ஐக்கிய சபை,
ஒட்டன்சத்திரம்.**

தேவ செய்தி

சகோ.
**T. ஆசீர் ஞானராஜ்**

தொடர்புக்கு:
**8903449124**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 94865 88270**